செ.வெ.எண்.477/2021 நாள்.23.10.2021

# திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்களில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் அச்சமங்கலம் ஊராட்சி மாக்கனூர் கிராமம், திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியம் ஆதியூர் ஊராட்சி இராவுத்தம்பட்டி கிராமம், சு.பள்ளிப்பட்டு ஊராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது மருத்துவர்களிடமும் செவிலியர்களிடமும் எத்தனை நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி எத்தனை நபர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பது குறித்தும் எவ்வளவு தடுப்பூசி இருப்பு உள்ளது குறித்தும் கேட்டறியப்பட்டது. கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வதின் அவசியத்தையும், அதன் நன்மைகளையும் பொது மக்கள் அறியும்படி எடுத்துகூற வேண்டும். ஊராட்சி மன்ற தலைவர்களிடம் உங்கள் ஊராட்சிகளிலுள்ள அனைத்து வார்டுகளிலும் எத்தனை நபர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்திகொண்டுள்ளார்கள் என்ற விபரங்களை தயார் செய்ய வேண்டும். அதனை தொடர்ந்து கொரோனா தடுப்பூசி செலுத்திகொள்ளாதவர்களுக்கு தடுப்புசி செலுத்தப்பட வேண்டும்.

மேலும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் நடமாடும் கொரோனா தடுப்பூசி முகாம்கள் மூலமாக கொரோனா தடுப்பூசிகளை பொது மக்களுக்கு வீடுவீடாக சென்று செலுத்தப்பட்டு வருகிறது. இக்கொரோனா தடுப்பூசி முகாம்களின் மூலம் 100 சதவிகிதம் பொது மக்களுக்கு செலுத்தப்பட வேண்டும் என வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் செவலியர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறைகளை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுகளின் போது திருப்பத்தூர் சார் ஆட்சியர் (பொறுப்பு) மற்றும் உதவி ஆணையர் (கலால்) திருமதி.பானு, வட்டாட்சியர் திரு.சிவபிரகாசம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரேம்குமார், திரு.சந்திரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் திருமதி.மணிமேகலை ஆனந்தகுமார், திரு.சிவகுமார், கிராம செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**